**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026ம் வருடம் மார்ச் மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.No.2/2026**
**in**
**O.S.No.3/2026**

சே.இராஜபாண்டி ...மனுதாரர்/வாதி

/எதிர்/

1. திருமதி.பாலம்மாள்
2. திரு.ஜெயமுருகன்
3. திரு.குருசாமி ......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 06.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.J.உதுமான் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மயில்ராஜபெருமாள் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்தில் வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என மனு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும், அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் கட்டளை 39 விதி 1, 2ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் தாவா வழக்கில் வாதி என்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள

வழக்குரையையும் இதன் ஒரு பாகமாக வாசித்துக்கொள்ள நீதிபதி அவர்களை தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன் என்றும், தாவாவை நன்கு விளக்கு வழக்குரையோடு இரண்டு வரைபடங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அதனையும் இதன் ஒருபாகமாக வாசித்துக்கொள்ள நீதிபதி அவர்களை தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன் என்றும், வழக்குரையோடு தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தில் கண்ட BCDEB பகுதி சொத்து தாவா சொத்து என்றும் வரைபடத்தில் கண்ட ABCDEFGHA பகுதி மொத்த சொத்தான 0.20.00 ஏர்ஸ் அதாவது 49.42 செண்ட் நிலமும் அதோடு சேர்ந்த 152.58 செண்ட் ஆக மொத்த சொத்தான 2 ஏக்கர் 2 செண்ட் நிலம். மனுதாரரும் அவருடன் உடன்பிறந்த சகோதரரான வயணபெருமாள் என்பவருக்கும் கடந்த 02-02-1979ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண் 123/1979 ஆவணம் மூலமாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், இவ்வாறு தாவா சொத்து உள்பட அதன் மேற்கு மற்றும் அதன் வடக்கிலுள்ள மொத்த சொத்தான 2 ஏக்கர் 2 செண்ட் நிலத்தை கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்த மனுதாரரும்ல அவர் சகோதரர் வயணபெருமாளும் தாவா சொத்து உள்பட மொத்த சொத்துக்கு மனுதாரர் பெயருக்கு நில உடமை மேம்பாட்டு திட்டகாலத்தில் 946ம் நம்பர் பட்டா பெற்றுள்ளதாகவும், அவ்வாறு மனுதாரரும் அவரின் சகோதரரும் கிரையம் பெற்ற சொத்துக்கு மனுதாரர் பெயருக்கு பெற்ற பட்டா எண் 946க்கான வரிகளை அரசுக்கு முறையாக செலுத்தி ரசீது பெற்றுள்ளதாகவும் இவ்வாறான நிலையில் மனுதாரரும் அவரின் சகோதரரான வயணபெருமாளும் தாவா சொத்தையும் அதன் வடபுறம் உள்ள சொத்தையும் அவர்களுக்குள் பாகம் செய்துகொண்ட போது தாவா சொத்து உள்பட அதன் மேற்கிலுள்ள வழக்குரை வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ள ABCDEFGHA பகுதி சொத்தான 0.20.00 ஏர்ஸ் அதாவது 49.42 செண்ட் நிலம் மனுதாரர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட மொத்த சொத்தையும் மனுதாரர் அடைந்து அதில் சொத்தின் மேற்குபுறம் வீடு கட்டியும், சொத்தின் கிழக்குபுறம்

தென்னைமரங்கள்– 10, பனைமரம்– 1. வேப்பமரம்–3. செட்–1. லெட்டீன் பாத்ரூம்–1. தண்ணீர் தொட்டி–1 வைத்தும் அதற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு சொத்தின் மேற்குபுறம் வெட்டப்பட்ட கிணற்றடியிலிருந்து பம்ப்செட் வழியாக பைப் பதித்து வைத்து அதன் மூலமாக தென்னை மரங்களுக்கும், இதர மரங்களுக்கும் தண்ணீர்பாய்ச்சி விவசாயம் செய்து சொத்தை மனுதாரர் அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதாகவும், இந்நிலையில் மனுதாரர் தாவா சொத்தை சர்வேக்கு படிகட்டி கடந்த 23–03–2024ம் தேதி அளந்து அளவீடு செய்ததாகவும் இவ்வாறான நிலையில் கடந்த 05–11–2025ம் தேதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மூவரும் ஒன்றுசேர்ந்து கொண்டு தாவா சொத்தில் மனுதாரர் அவரது டிராக்டர் மூலமாக உழுதுகொண்டிருந்த பொழுது மனுதாரரை வேலைசெய்யவிடாமல் தடுத்து தகராறு செய்துள்ளதாகவும், அதனால் மனுதாரர் உடனடியாக சாயல்குடி காவல்நிலையத்தில் புகார் செய்ததாகவும், அந்த புகாரின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மூவர் மீதும் சாயல்குடி காவல்நிலையத்தில் கடந்த 06–11–2025ம் தேதி குற்ற எண் 219/2025 வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் மனுதாரர் தாவா சொத்தில் தண்ணீர் தொட்டி வைத்தும் கிணற்றின் மூலமாக தாவா சொத்தை சாகுபடியும் செய்து வருவதாகவும், நரிப்பையூர் கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் வழங்கியுள்ளார்.மேலும் தாவா சொத்துக்கு கிழக்குபுறமுள்ள சர்வே எண் 232/2ஏ1பி–ல் கண்ட சொத்தை சக்திவேல் அவர்கள் தன்னுடைய மனைவியான 1ம் பிரதிவாதி எஸ்.பாலம்மாள் மற்றும் அவரது மகனான 2ம் பிரதிவாதி எஸ்.ஜெயமுருகன் ஆகியோர்கள் பெயரில் கடந்த 14–11–2014ம் | தேதி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்தபோது அந்த சொத்துக்கு மேற்கே உள்ள சர்வே எண் 232/2ஏ1ஏ1ஏ–ல் கண்ட சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று ஒப்புக்கொண்டு இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாகவும். இவ்வழக்கில் கண்ட 1, 2 பிரதிவாதிகளும் அவர்கள் சொத்தான சர்வே எண் 232/2ஏ1பி–ல் கண்ட

சொத்திற்கும் மேற்கில் உள்ள சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று ஒப்புக்கொண்டு இனாம்செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளார்கள். இவ்வாறு மனுதாரர் தாவா சொத்தை அடைந்து இன்றுவரை தனது கைவச அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்துவரும் நிலையில் தாவா சொத்திற்கு கிழக்குபுறமாக உள்ள 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதியை தங்களோடு சேர்த்துக்கொண்டு தாவா சொத்தை ஆக்கிரமிக்கவும் சொத்தின் அம்சங்களை மாற்றவும் கடந்த 15-12-2025ம் தேதி முதல் முயற்சிசெய்து வருகிறார்கள் என்றும், அதனால் மனுதாரர் உடனடியாக சாயல்குடி காவல்நிலையத்தில் புகார்செய்ய சென்றபோது ஏற்கனவே மனுதாரர் கொடுத்த புகாருக்கு 1, 2 பிரதிவாதிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுவிட்டது என்றும் எனவே எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகளின் அக்கிரம செய்கையை தடுக்க மனுதாரர் நீதிமன்றத்தினை அணுகி உத்தரவு பெற்றுவந்தால் மட்டுமே தங்களால் மனுதாரருக்கு உதவ முடியும் என்று சொல்லி மனுதாரர் கொடுத்த புகாரை காவல்துறையினர் பெற்றுக்கொள்ள மறுத்திவிட்டதாகவும் அதனை சாதகமாக எடுத்துக்கொண்ட எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தாவா சொத்தில் அக்கிரமமான முறையில் ஆக்கிரமிக்கவும், மனுதாரருடைய அமைதியான அனுபவத்திற்கு தடையிடைஞ்சல் செய்யவும் கடந்த 30-12-2025ம் தேதி முதல் முயற்சி செய்து வருகிறார்கள் என்றும் அதனை மனுதாரர் மிகவும் கஷ்டமான முறையில் தடுத்து வைத்துள்ளதாகவும், இருந்தாலும் பிரதிவாதிகள் ஒன்றுகூடிக்கொண்டு எப்படியும் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்யாமல் விடமாட்டோம் என்று ஊரில் பிரஸ்தாபம் செய்து வருவதாகவும், தாவா சொத்தில் எதிர்மனுதார்கள் /பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையோ, அனுபவமோ கிடையாது. தாவா சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டு மனுதாரருடைய தனித்த கைவச அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் அக்கிரமஸ்தர்கள், ஆட்சேர்க்கை உள்ளவர்கள் எதனையும்

துணிந்து செய்யக்கூடியவர்கள் என்றும், எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளின் அக்கிரம செய்கையை சமூகம் நீதிமன்றத்தின் உத்தரவின் வாயிலாகவே தடுத்து நிறுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது என்றும், இல்லாதுபோனால் புகார்தாரருக்கு தாவா சொத்தைப்பொறுத்து ஈடுசெய்ய முடியாத பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது என்றும், இந்த மனுவை பொறுத்து முதல்நிலை வழக்கும் சமநிலை வழக்கும் மனுதாரர் பக்கமே இருந்து வருகிறது என்றும் ஆகையால் சமூகம் நீதிமன்றம் மனுதாரர் கைவச அனுபவத்தில் உள்ள தாவா சொத்தில் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ எவ்வகையிலும் தடையிடைஞ்சல் செய்யக்கூடாது என்று இந்தமனு முடியும்வரை இடைக்காலமாகவும், அசல் வழக்கு முடியும் வரை தற்காலிகமாகவும் Injunction உத்தரவு செய்து 1 முதல் 3 எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை மற்றும் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 1 முதல் 3 எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>

வாதியின் வழக்கானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், அது பிரதம நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும், வாதி பல்வேறு உண்மை சங்கதிகளை மறைத்து சங்கதிகளைக் கொண்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், தாவா வழக்குரையோடு வாதி தாக்கல் செய்துள்ள வரைபடங்கள் சரியானவை அல்ல. வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவைகள் ஆகும் என்றும், மேற்படி வரைப்படங்கள் வாதியின் வழக்கிற்காக தோராயமாக வாதியால் புற்பத்தி செய்யப்பட்டதாகும் என்றும், அதனால் அந்த வரைபடத்தை வைத்து சமூகம் நீதிமன்றம் வழக்கில் எந்தவொரு முடிவும் செய்யமுடியாது என்றும்,

வாதிக்கும் அவரது சகோதரருக்கும் 02.02.1979 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் வாங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள சொத்து விவரங்கள் சரியானதல்ல என்றும், அதாவது 49.42 செண்டு நிலமும் அதோடு சேர்ந்த 152.58 செண்டு நிலமும் சேர்த்து 2 ஏக்கர் 2 செண்டு நிலம் கிரையம் வாங்கியதாக சொல்லியிருப்பது உண்மையல்ல என்றும், 02.02.1979 தேதியிட்ட கிரைய ஆவணத்திலும் சொத்து விவரங்களும் அவ்வாறு கூறப்படவில்லை என்றும், வாதியும், அவரது சகோதரர் வயணப்பெருமாளும் தங்களது சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொண்டதாக பிராதில் கண்டிருப்பது உண்மையல்ல என்றும், பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கு எவ்வித ஆவணமும் வாதி தாக்கல் செய்யவில்லை என்றும், பிராதில் சொல்லப்பட்டுள்ள பட்டா எண்: 946-ல் வாதியின் மற்றொரு சகோதரர் ஆத்திமுத்து என்பவரது பெயரும் கூட்டாக தாக்கலாகி உள்ளதாகவும், ஆனால் மேற்கண்ட ஆத்திமுத்துவும் தாவா சர்வே எண்ணில் எந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்பது குறித்து பிராதில் எந்த விவரமும் குறிப்பிட்டு கூறவில்லை. பட்டா எண் 946ல் வயணப்பெருமாள், ஆத்திமுத்து ஆகியோர்களது பெயர்களும் கூட்டாக தாக்கலாகி உள்ளதால் மேற்கண்ட இருவரும் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் ஆவார்கள் என்றும், எனவே இந்த வழக்கானது அவசிய தரப்பினர்களை கட்சியில் சேர்க்காத தோசத்திற்கு உட்பட்டதாகும் என்றும் வாதி கூறும் பாகப்பிரிவினையில் தாவா சர்வே எண்: 232/2A-ல் ஏக்கர் 2 செண்டு 2-ல் வாதிக்கு எந்த பகுதி ஒதுக்கப்பட்டது என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யாமல் வாதிக்கு எந்த பகுதி பாத்தியப்பட்டது என்பதை விளம்புகை செய்யாமலும், வாதி எந்த பகுதியை அனுபவித்தது வந்தார் என்பதற்கும் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யாமல், தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், வாதி பிராதில் சொல்லியுள்ள தாவா சொத்தான 9.94 செண்டு நிலம் பிராதில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணில் தான் உள்ளது என்பதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல்

செய்யப்படவில்லை என்றும், மேலும் நடந்ததாக சொல்லப்படும் பாகப்பிரிவினையில் வாதி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படும் 49.42 செண்டு நிலம் வாதி குடும்பத்திற்கே பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றும், உரிமை இல்லாத சொத்தில் அனுபவம் இருப்பதாக கூறிக்கொண்டு விளம்புகை கேட்கப்படாமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட தபசில சொத்தில் வீடு கட்டியும், மரங்கள் வைத்தும் விவசாயம் செய்து வருவதாக குறிப்பிடப்பட்டிருப்பது வேடிக்கையான விசயம் என்றும், அவ்வாறு தபசில் சொத்தில் விவசாயம் செய்வதாக கூறியிருப்பது நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காக சொல்லப்பட்ட விஷயம் என்றும், தாவா சொத்தை 23.03.2024 சர்வேயருக்கு படி கட்டி அளவீடு செய்ததாக கண்டிருப்பது உண்மையல்ல வாதி அளவீடு செய்ய சர்வேயருக்கு படி கட்டியதாக கூறப்படும் சொத்தானது சர்வே எண்: 208/3A3 என்றும் இதற்கு மாறாக தபசில் சொத்தை அளவீடு செய்யப்பட்டதாக கூறியிருப்பது உண்மையல்ல என்றும், வாதி இந்த பிரதிவாதிகள் மீது காவல்துறையில் கொடுத்த புகார் மனுவில் சர்வே 208/3A3 நிலத்தை தான் அளவீடு செய்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றும் இதிலிருந்தே வாதி சர்வே எண்: 208/3A3 நிலத்தை தான் அனுபவம் து வருகிறார் என்பது தெளிவாக துலங்குகிறது என்றும், பிராது தபசில் சொத்தை வாதி அனுபவிப்பதாகவும், அதனை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ததாகவும் குறிப்பிடப்படவில்லை. எனவே வாதி பிராது தபசில் சொத்தை ஒருபோதும் அனுபவம் செய்யவில்லை என்பது நன்கு துலங்கும் என்றும் தாவா சொத்தை வாதி தான் அனுபவம் செய்து வருவதாக நரிப்பையூர் கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியதாக ல்லியிருப்பது உண்மையல்ல என்றும், கிராம நிர்வாக அலுவலர் கொடுத்ததாக தாக்கல் செய்துள்ள சான்றிதழ் வேறு சர்வே எண்ணிற்குரியது என்றும் தாவா சொத்திற்குரியது அல்ல என்றும், 1ம் பிரதிவாதியின் கணவர் சக்திவேல் என்பவர் 1, 2 பிரதிவாதிகளுக்கு

எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்கு எல்கையாக சர்வே எண்: 232/2A1A1A–ல் கண்ட சொத்து உள்ளதாக கூறியிருப்பதாக பிராதில் சொல்லியிருப்பது உண்மையல்ல என்றும், உண்மையில் மேற்படி ஆவணத்தில் மேற்கு ராஜபாண்டி காலிமனை என்றுதான் சொல்லப்பட்டுள்ளது, அது தாவா சொத்து அல்ல என்றும், வாதி பொய்யான வழக்குமூலத்தை கொண்டு உரிமையில்லாத சொத்திற்கு மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து இல்லாத உரிமையை நிலைநாட்டுவதற்காக பொய்யான வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதிக்கு பிரதிவாதிகள் எவ்வித இடையூறுகளும் செய்யவில்லை என்றும் வாதி காவல்துறையில் கொடுத்த புகாரின்படி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே வாதியின் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், பிராது தபசில் சொத்து வாதிக்கு, பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றும், அதனை வாதியே நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார் என்றும் உரிமையில்லாத சொத்திற்கு போலியான காரணம் காட்டி உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், உண்மையில் 1ம் பிரதிவாதியின் மாமியாரும் 2ம் பிரதிவாதியின் தந்தை வழி பாட்டியுமான தங்கம்மாள் என்பவர் அருணாசல நாடார் என்பவரிடமிருந்து 03.09.1974 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் மூலம் நரிப்பையூர் கிராமத்தில் பழைய பட்டா எண்: 225–ல் கண்ட சர்வே எண் 232/2–ல் ஏக்கர் 2 செண்டு 2 நிலத்தை 1வது அயிட்டமாகவும் அதற்கு அடுத்த தாக்கு 48 செண்டு நிலத்தை அதே சர்வே எண்ணில் கீழ்புறத்திற்கும், அடுத்ததற்கு அதாவது 1ம் அயிட்டத்திற்கும் மேற்கு பொன்னுசாமி நாடார் இடத்திற்கும் வடக்கு பொன்னையா நாடார் நிலத்துக்கும் கிழக்கு நாராயண நாடார் நிலத்துக்கும் தெற்குமான செண்டு 48–ம் அதிலுள்ள பனை விருட்சங்கள், புளியமரம், கிணறு உட்பட நிலமும், 2வது அயிட்டமாகவும் ஆக மொத்தம் ஏக்கர் 2 செண்ட் 50 நிலத்தை கிரையம் பெற்று அரசு கணினி பட்டா பெற்று ஆண்டனுபவித்து வந்தார் என்றும், தங்கம்மாளின் காலத்திற்கு

பிறகு மேற்படி சொத்தானது அவரது வாரிசுகளான சக்திவேல், மாணிக்கவேல் தங்கவேல் மற்றும் குருசாமி ஆகியோர்களுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டு அடைந்து அனுபவித்து வந்து அதில் அவர்களுக்குள் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினைபடி பிரதிவாதியின் கணவர் சக்திவேல் என்பவர் தனக்கு பாத்தியப்பட்ட பாகத்தில் கண்ட ஒரு பகுதி சொத்தான 25 செண்டு நிலத்தை மட்டும் தனது வாரிசுகளான 1, 2 பிரதிவாதிகளுக்கு 14.11.2014 நேதியிட்ட இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்து விட்டதாகவும் மேற்படி சொத்திற்கு மேல்புறம் வாதிக்கு பாத்தியப்பட்ட வேறு நிலம் உள்ளதாகவும், அது தவா நிலம் அல்ல என்றும், 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்தை வாதி மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான வியாஜ்ஜியமூலத்தை உற்பத்தி செய்து மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் இந்த காரணத்திற்காகவும் வாதியின் வழக்கானது சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாய் இருக்கிறது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

(i) மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்தில் வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என மனு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும், அசல்

வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் கட்டளை 39 விதி 1, 2ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) இவ்வழக்கினை பொருத்த வரை வாதிகள் அவரது சகோதரர் வயணப்பெருமாள் என்பவரும் பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கும், வாதி கோரும் பாகப்பிரிவினையை தாவா சர்வே எண் 232/2Aல் ஏக்கர் 2 செண்ட் 2ல் வாதிக்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மனுவில் தாவா சொத்தை 23.03.2024ம் தேதியன்று சர்வேயர் மூலம் அளவீடு செய்ததாக கூறியுள்ள போதிலும் அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

(iii) மேலும் பிரதிவாதிகள் அத்துமீறி தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் சொல்லப்பட்ட போதிலும் அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.14 ஆவணத்தை பரிசீலனை செய்யும் போது கடந்த 06.11.2025ந் தேதியன்று வாதியால் பிரதிவாதிகள் மீது சாயல்குடி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் தாவா சொத்திற்கான சர்வே எண் 232/2ல் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து இடைஞ்சல் தருவதாக புகார் கொடுக்கப்படாமல் சர்வே எண்.208/3ஏ3ல் பிரச்சனையில் ஈடுபட்டு வருவதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது.

(iv) மேற்படி ம.சா.ஆ.14 ஆவணத்தின் மூலம் தாவா சொத்தின் சர்வே எண்ணில் பிரதிவாதிகள் பிரச்சனையில் ஈடுபடவில்லை என்பதும் இவ்வழக்கிற்காக தாவா சொத்தில்தான் பிரதிவாதிகள் இடைஞ்சல் தருவதாக மிகைப்படுத்தி இவ்வழக்கில் ம.சா.ஆ.14 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

(v) மேலும் பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி பாகப்பிரிவினை படி பிரதிவாதியின் கணவர் சக்திவேல் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில்

அவர்களது வாரிசான 1,2 பிரதிவாதிகளுக்கு 14.11.2014ம் தேதியன்று இனாம் செட்டில்மெண்ட் மூலம் சொத்தை ஒப்படைத்துவிட்டதாக ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. அதனை மறுத்து அசல் வழக்கை நிரூபணம் செய்யவேண்டியது வாதிகளின் கடமையாகும்.

(vi) மேலும் தாவா சொத்தில் மனுதாரர் அல்லது எதிர்மனுதாரரின் அனுபவத்தை ஆவணங்களின் அடிப்படையிலும், சாட்சியங்களின் அடிப்படையிலும் நிரூபிக்க வேண்டிய கடமை இருதரப்பிற்கும் உள்ளதாலும் மேற்கண்ட பிரச்சனைக்கான தீர்வினை இந்த மனுவில் தீர்மானிக்க முடியாது என்பதாலும், அசல் வழக்கில்தான் மேற்படி பிரச்சனைக்கு முழுமையாக தீர்வு காணமுடியும் என்பதாலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டு மனுதாரர் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 06.03.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.06 14:45:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> : இல்லை

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 02.02.1979ந் தேதியிட்ட தாவா சொத்தை வாதியும் அவரது சகோதரரும் கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் (சார்பதிவாளர் சான்றிட்ட நகல்) |

| | |
|---|---|
| ம.சா.ஆ.2 | 15.05.1987ந் தேதியிட்ட தாவா சொத்துக்கு வாதி பெயருக்கு நில உடைமை மேம்பாட்டு திட்டகாலத்தில் பட்டா எண் 946 வழங்கப்பட்டதற்கான பட்டா அசல் |
| ம.சா.ஆ.3 | 03.02.2005ந் தேதியிட்ட தாவா சொத்துக்கு வாதி பெயருக்கு பட்டா எண் 1427 உள்ளது என்பதற்கான பட்டா மாறுதல் உத்தரவு அசல் |
| ம.சா.ஆ.4 | 20.04.2005ந் தேதியிட்ட தாவா சொத்துக்கு வாதி பெயருக்கு பட்டா எண் 1427 உள்ளது என்பதற்கான கணினி 10(1) பட்டா அசல் |
| ம.சா.ஆ.5 | 13.10.1993 ம் தேதியிட்ட தாவா சொத்துக்கு வாதி செலுத்திய வரி ரசீது அசல் |
| ம.சா.ஆ.6 | 01.02.1997ந் தேதியிட்ட தாவா சொத்துக்கு வாதி செலுத்திய வரி ரசீது அசல் |
| ம.சா.ஆ.7 | 05.07.2022ந் தேதியிட்ட தாவா சொத்துக்கு வாதி செலுத்திய வரி ரசீது அசல் |
| ம.சா.ஆ.8 | 17.04.2021ந் தேதி தாவா சொத்தில் வாதி கிணற்றின் மூலமாக தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வருகிறார் என்பதற்கா நரிப்பையூர் குரூப் கிராம நிர்வாக அதிகாரி வழங்கிய சான்றிதழ் அசல் |
| ம.சா.ஆ.9 | 19.12.2017 ந் தேதியிட்ட தாவா சொத்துக்கு மேற்குபுறமுள்ள வீட்டிற்கு வாதி செலுத்திய வீட்டுவரி ரசீது |
| ம.சா.ஆ.10 | 28.12.2022 ந் தேதியிட்ட தாவா சொத்து்கு மேற்புறம் உள்ள வீட்டிற்கு வாதி செலுத்திய மின்கட்டண ரசீது அசல் |
| ம.சா.ஆ.11 | 24.04.2023ந் தேதியிட்ட தாவா சொத்துக்கு மேற்குபுறம் உள்ளவீட்டிற்கு வாதி செலுத்திய மின்கட்டண ரசீது அசல் |
| ம.சா.ஆ.12 | தாவா சொத்துக்கு மேற்குபுறம் உள்ள வீட்டிற்கு வாதி செலுத்திய மின்கட்டணத்திற்கான மின்கட்டண அட்டை அசல் |
| ம.சா.ஆ.13 | 14.11.2014 தாவா சொத்தை வாதியின் சொத்து என ஒப்புக்கொண்டு 1,2 பிரதிவாதிகள் பெயரில் பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.14 | 06.11.2025ந் தேதியிட்ட பிரதிவாதிகள் மீது வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட் முதல் தகவல் அறிக்கை |

| | |
|---|---|
| ம.சா.ஆ.15 | 03.03.2023ந் தேதியிட்ட தாவா சொத்துக்கு வாதி பெயரில் உள்ள பட்டாவுக்கான 10(1) கணினி பட்டா நகல் |
| ம.சா.ஆ.16 | 11.01.2026ந் தேதி தாவா சொத்துக்கு வாதி பெயரில் உள்ள பட்டாவுக்கான 10(1) கணினி பட்டா நகல் |
| ம.சா.ஆ.17 | 09.01.2025ந் தாவா சொத்துக்குரிய கணினி புலப்படசுவடு நகல் |
| ம.சா.ஆ.18 | 23.12.2025ந் தேதியிட்ட தாவா சொத்து மற்றும் அதனை சுற்றியுள்ள சொத்துக்கான கணினி புலப்பட சுவடு நகல் |
| ம.சா.ஆ.19 | தாவா சொத்தை காண்பிக்கக்கூடிய புகைப்படங்கள் சி.டி உடன் அசல் |
| ம.சா.ஆ.20 | பிராது வரைபடம் அசல் |

.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u> : இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 03.09.1974ம் தேதியிட்ட தங்கம்மாள் பெயரில் உள்ள கிரைய ஆவணம் அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 14.02.2026ந் தேதியிட்ட தாவா சொத்திற்கான கணினி கூட்டு பட்டா |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.06 14:44:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.